

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | மார்ச் 24, 2022 | புரட்சி 21 | முழக்கம் 10 | விலை: ரூ.3.00

## ஃபாரூக் நினைவு நாளில் கொளத்தூர் மணி பேச்சு

# ‘சொர்க்கம்’ போவதற்கு அல்ல; தீண்டாமை ஒழிப்புக்கே மதம் மாறச் சொன்னார் பெரியார்

***ஃபாரூக் அய்ந்தாம் ஆண்டு நினைவு நாள் சிந்தனை அரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் தலைமை உரை.***

*தோழர் ஃபாரூக், கோவை திராவிடர் விடுதலைக் கழகத்தின் செயல்பாட்டாளர். அவர் கொடூரமாக மத அடிப்படைவாதிகளால் மார்ச் 16, 2017இல் கொலை செய்யப்பட்டு 5 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. பிப்.19 அன்று சென்னை தலைமைக் கழக அலுவலகத்தில் 5ஆம் ஆண்டு நினைவு நாள் சிந்தனை அரங்கில் நடைபெற்றது. ஃபாரூக் கடவுள், மத, இறை மறுப்பாளர்; இஸ்லாத்தின் இறையியல் கொள்கையை உறுதியாக மறுத்தவர். ‘வாட்ஸ் அப் குழு’ ஒன்றை உருவாக்கி அதன் வழியாக மதப் பிடியிலிருந்து இஸ்லாமியர்கள் வெளி வர வேண்டும் என்ற அறிவியலைப் பரப்பியவர். அதற்காக இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் நயவஞ்சகமாக கொலை செய்யப்பட்டார். இஸ்லாத்திலிருந்து விலகிச் சென்றவர்கள் யாராக இருந்தாலும் கொல்லப்படுவார்கள் என்ற எச்சரிக்கையை ஃபாரூக் கொலை வழியாக அடிப்படைவாதிகள் சமூகத்துக்கு எச்சரிக்கை விடுப்பதற்கே ஃபாரூக்கை பலியாக்கினார்கள். தமிழ்நாட்டில் இப்படி எச்சரிக்கை செய்வதற்காக நடந்த முதல் கொலை இது தான். பார்ப்பனிய சனாதன சக்திகள் இஸ்லாமிய சமூகத்தை எதிரிகளாகக் கட்டமைத்து சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கும் சூழலில் நாம் அதை முறியடித்து அவர்களோடு கைகோர்த்து நிற்கிறோம். அதே நேரத்தில் அடிப்படை வாதம் ஃபாரூக் உயிரைப் பறித்ததையும் அழுத்தமாக கண்டிக்கிறோம். இந்த இரண்டு செய்திகளையும் உணர்த்துவதற்காகவே கடந்த 5 ஆண்டுகளாக ஃபாரூக் நினைவு நாளை மதங்களின் பிற்போக்குத்தனத்தை, சமூக வளர்ச்சிக்கு தடைச் சுவராக நிற்பதை விளக்கும் கருததரங்குகளை நடத்தி வருகிறோம்.*

*இஸ்லாமிய அமைப்புகளோடு நாம் வைத்துள்ள உறவு என்பது இப்போது அல்ல பெரியார் காலத்திலிருந்தே எப்படி இருந்தது என்று நமக்குத் தெரியும், 1925ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அந்த ஆண்டிலேயே நபிகளின் பிறந்தநாள் விழாவிற்கு சத்தியமங்கலத்தில் உள்ள பெரிய பள்ளிவாசலுக்கு பெரியாரை அழைத்து இஸ்லாமியர்கள் பேச வைக்கிறார்கள். அப்போது பெரியார் பேசுகையில் கூறுகிறார் மிகவும் சிறப்பாக முற்போக்காக நடந்தது இந்த நிகழ்ச்சி, அப்படிப்பட்ட ஒரு மார்க்கம் இது. ஆனால் உங்களிடம் எனக்கு ஒரே ஒரு குறை உள்ளது. நீங்கள் “மனிதனை விட மதமே பெரிது என்று கூறுகிறீர்கள்” அந்த ஒரு குறை தான் உங்களிடம் எனக்கு தெரிகிறது வேறொன்றுமில்லை. பெரியார் அப்போது சொன்ன இந்த குறை இன்றளவும் நடைமுறையில் மாறவில்லை என்பதை நாம் இப்போதும் பார்க்கிறோம். மனிதனை விட மதம் பெரிது என்று நினைத்தவர்கள் தான் இந்தக் கொடூரத்தை செய்தார்கள் என நாம் அறிவோம். ஆனால் இப்போது புதிய புரட்சிக்காரர்கள் உருவாகி இருக்கிறார்கள். புரட்சிகர இயக்கத்தில் இருந்து வந்த ஒருவர் சொல்லுகிறார் அவர் குடிபோதையில் தகராறு செய்து கொலை செய்துவிட்டார் என்றும், இன்னொருவர் சொல்கிறார் ஏதோ தொழில் மோசடியில் கொலை செய்துவிட்டார் என்றும் பேசுகிறார்கள்.*

*அப்போதும் இப்போதும் இந்த ஒரே கேள்வியை எழுப்புகிறேன். சாதாரணமாக ஒரு இஸ்லாமியர் மரணத்திற்கு எவ்வளவு இஸ்லாமியர்கள் வந்திருக்க வேண்டும் அதுவும் கோவை மாவட்டத்தில். ஆனால் இவர் கொலை செய்யப்பட்டு உடல் அந்த மருத்துவமனையில் வைத்திருந்தபோது அங்கு கூடியிருந்த 400 பேரில் 10 விழுக்காடு கூட இஸ்லாமியர்கள் இல்லையே அது ஏன் என்று கேட்டோம் ? சாதாரணமாக ஒரு அடிதடியில் அல்லது தகராறில் ஈடுபட்டு கொலை செய்யப்பட்டு விட்டான் அல்லது எப்படியோ இறந்து விட்டான் என்றாலும்கூட மிகக் குறைந்த அளவில் வந்தார்கள். பெரும் திரளாக திரண்டு வரும் இஸ்லாமியர்கள், ஒரு வேளை அந்த இறப்பிற்கு சென்றாலே நாமும் ஃபாரூக்கின் கொள்கையை ஏற்றுக் கொண்ட இஸ்லா மியர்களாக தெரிந்து விடுவோமோ என்ற அச்சத்தில் தான் அவர்கள் வரவில்லை இதனால்தான் அவர்கள் வராமல் தடுக்கப் பட்டனர். அப்போது அவர்களுக்கு தெரிந்திருக்கிறது இது மதத்தின் காரணமாக அவர் நாத்திகம் பேசியதற்காக செய்யப்பட்ட கொலை தான் என்று இஸ்லாமியர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.*




- **இந்த நிகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் இங்கே வந்திருந்தால் கேள்விகளைக் கேளுங்கள்; நாங்கள் பதிலளிக்கத் தயார்.**
- **எங்களைப் போன்ற சுயமரியாதைக்காரர்களுக்கு மத நம்பிக்கை இல்லை என்றும் தீண்டாமை ஒழிவதற்கு மட்டும் இஸ்லாமில் சேரலாம் என்பதே நான் கூறும் கருத்து என்றும் கூறினார் பெரியார்.**
- **பொது மேடைகளில் பேசும் இஸ்லாமியர்கள்கூட மத மறுப்பாளர்களான எங்களுக்கும்இறைவனின் ஆசி கிடைக்கும் என்று பேசும்போதுகூட நாங்கள் அனுமதித்தே வந்திருக்கிறோம்.**

*ஆனால் இப்போது இஸ்லாமியர்களுக்கு துணை போகிற புரட்சிக்காரர்கள் தான் இதை பேசிக் கொண்டிருக்கிறார்கள். நமக்கு அது வருத்தமான செய்திதான். இன்னொன்று அரசியல் வெளியில் பல நிகழ்ச்சிகளில் நாம் இஸ்லாமிய அமைப்புகளோடு சேர்ந்து கலந்து கொண்டு இருக்கிறோம். இந்திய துணைக் கண்டத்தின் பெரும் கேடாக இருக்கிற இந்துத்துவத்தை எதிர்த்து நிற்பதற்காக, சமூக அமைதிக்கு சிறுபான்மையினர் இருப்புக்கே சவாலாக இருக்கின்ற அவர்களுக்கு எதிரான போராட்டங்கள், கூட்டங்கள் அல்லது எதுவாக இருந்தாலும் அதில் நாம் நிலைத்து இருக்கின்ற போது பாதிக்கப்பட்ட சிறுபான்மையினர் பக்கம் நாம் நிற்கிறோம். அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லாமல் முழு மனதோடு தான் இருக்கிறோம். பெரியாரிய தோழர்கள் நாத்திகர்கள் தான். இறை நம்பிக்கை அற்றவர்கள் ஆனால் இஸ்லாமியர்கள் இறை நம்பிக்கை உள்ளவர்கள் தான். ஆனால் பொது மேடைகளில் கலந்து பொதுவான நிகழ்ச்சிகளில்கூட தங்களது இறைநம்பிக்கை சிந்தனையை அப்படியே வைத்துக் கொண்டு அந்தப் பொது மேடையிலேயே நமக்கெல்லாம் சேர்த்து கூட அவர்கள் ஆசிர்வாதம் செய்வார்கள். கருணை மிக்க கடவுளின் அருள் நம் மீதும் பொழியட்டும் என்று சொல்வார்கள். அதையெல்லாம் நாம் அனுமதித்துக் கொண்டும், அதே நேரத்தில் நாத்திக சிந்தனையை நாம் கைவிடாமல் வைத்துக் கொண்டு இருந்தாலும் அந்த பொதுவான மேடையில் எப்போதும் நாம் அந்த கருத்தை மறுத்துப் பேசாமல் இருந்தோம். நாமும் மறுத்துப் பேசியிருக்கலாம் இல்லாத கடவுளைப் பற்றி அவர் பேசினார் ஆனால் இருக்கின்ற மனிதர்கள் ஆசியில் அவர்கள் நன்றாக இருக்கட்டும் என்று நாமும் பேசி இருக்கலாம். ஆனால் அப்படி ஒருபோதும் பேசியது இல்லை. நாம் எப்போதும் இயல்பாக தோழர்களே நண்பர்களே என்று கூறிக் கொள்வதோடு நிறுத்திக் கொண்டிருக்கிறோம். அப்படி தான் உறவுகளைப் பேணி வைத்திருக்கிறோம்.*

*பெரியாரிய இயக்கங்கள் தன் கருத்து எதுவாக இருந்தாலும் பொதுவான மேடைகளில் பிறரைக் காயப்படுத்தாமல் சின்ன சின்ன முரண்பாடுகளுக்கு இடமளிக்காமல் வெளிப்படையாக எதையும் பேசாமல் தான் நிறைய உறவுகளை பேணி வைத்திருக்கிறோம்.*

*(தொடரும்)*

### கருத்துச் செறிவுடன் நடந்த ஃபாரூக் நினைவு சிந்தனை அரங்கம்

*இஸ்லாமிய மத அடிப்படை வாதத்திற்குப் பலியான மனிதநேயன் ஃபாருக் 5ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வின், சிந்தனை அரங்கம் 19.03.2022 சனிக்கிழமை அன்று மாலை 5 மணியளவில் திவிக தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்வை தலைமையேற்று வழிநடத்தினார்.*

*‘இஸ்லாத்தில் நாத்திகர்கள்’ என்ற தலைப்பில் இந்திய முற்போக்காளர்கள் கூட்டமைப்பு – ஜின்னா மாச்சு, ‘அறிவியலுக்கு முரணான கிருஸ்துவம்’ என்ற தலைப்பில் ஆய்வுக்கூடம் – நாத்திக வசந்தன், ‘இந்து மதமும் – பெண்களும்’ என்ற தலைப்பில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை கொள்கை பரப்பு செயலாளர் இரா. உமா, ‘இஸ்லாமும் பெண்களும்’ என்ற தலைப்பில் எழுத்தாளர் பீர் முகமது, முன்னாள் முஸ்லீம் அமைப்பைச் சார்ந்த உமர் – ஹிஜாப், இஸ்லாத்தில் பெண்களின் அவலங்களைப் பற்றியும் உரையாற்றினர்.*

*இறுதியாக ‘மானுடத்துக்கு மதம் தேவையா?’ என்ற தலைப்பில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். நிகழ்விற்கு ஃபாருக் நண்பர் மணிவண்ணன் நன்றி கூறினார்.*

*இரவு உணவை ஃபாருக் நண்பர் அய்யப்பன் ஏற்பாடு செய்தார். நிகழ்வில், “குர்ஆனில் சில அய்யப்பாடுகள்” – லூசிஃபர் எழுதிய நூல், வெளியிடப்பட்டது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நூலினை வெளியிட, பாருக்கின் இளமைக் கால நண்பர் ஐயப்பன் முதல் படியைப் பெற்றுக் கொண்டார். நிகழ்வில் கலந்து கொண்ட நூற்றைம்பதுக்கும் மேற்பட்டோருக்கு இந்த நூல் இலவசமாக வழங்கப்பட்டது.*

தலையங்கம்

## ‘நீட்’ மசோதாவைக் கிடப்பில் போடும் ஆளுநரின் அரசியல் பின்னணி

தமிழ்நாடு முதலமைச்சர், ஆளுநர் ஆர்.என் இரவியை சந்தித்திருக்கிறார். நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பக் கோரியதை ஆளுநர் ஏற்றுக் கொண்டு விட்டதாக தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பு கூறுகிறது. நீட் விலக்கு மசோதாக்களைப் போல வேறு பல மசோதாக்களையும் ஆளுநர் கிடப்பில் போட்டு வைத்துள்ளார். முதலமைச்சர் “The Dravidian Model” என்ற ஆங்கில நூலை ஆளுநருக்கு பரிசாக வழங்கியிருக்கிறார்.

தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பு இரண்டு செய்திகளைக் கூறுகிறது. தமிழ்நாடு சட்டமன்றத்தின் மாண்பை ஆளுநர் காப்பாற்ற வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் உணர்வை ஆளுநர் மதிக்க வேண்டும். இந்த இரண்டு கோரிக்கைகளையும் ஏற்று ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு நீட் விலக்கு மசோதாவை உறுதி கூறியபடி அனுப்பி வைப்பாரா? மாட்டாரா? என்று பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். (இது நாள் வரை ஆளுநர், குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கவில்லை) இந்தப் பிண்ணனியில் தமிழ்நாட்டு ஆளுநரைப் பற்றிய ஒரு வரலாற்று செய்தியை நினைவு படுத்துவது சரியாக இருக்கும்.

நாகாலாந்து மாநிலத்தின் ஆளுநராக இரவி இருந்தார். நாகாலாந்தை தனி நாடாகக் கேட்டு பல ஆயுதம் தாங்கிய குழுக்கள் அங்கே போராட்டம் நடத்திக் கொண்டிருந்தன. 1947 ஆகஸ்டு 15 இந்தியா சுதந்திரம் அடைந்ததாக கூறப்பட்டாலும், அதற்கு முதல் நாள் ஆகஸ்டு 14ஆம் தேதி நாகாலாந்து தனி நாடு என்று போராளிக் குழுக்கள் அறிவித்து தங்களுக்கென்று தனி இராணுவம் ஒன்றை அமைத்துக் கொண்டனர். 1952இல் இந்திய ஒன்றிய இராணுவம் ஆயுதம் தாங்கிய நாகா குழுவை கடுமையாக ஒடுக்கியது. தற்போது மோடி ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு ஆயுதம் தாங்கிய ‘Nationalist Socialist Council of Nagaland’ (NSCN) என்ற அமைப்போடு ஒன்றிய அரசு பேச்சுவார்த்தை நடத்தியது. ஒன்றிய பேச்சுவார்த்தைக் குழுவிற்கு தலைமை தாங்கியவர் தற்போது தமிழ்நாட்டின் ஆளுநராக இருக்கக் கூடிய இரவி. அப்போது அவர் நாகாலாந்தின் ஆளுநராக இருந்தார்.

2015ஆம் ஆண்டு ஆகஸ்டு 3ஆம் தேதி NSCN குழுவிற்கும் இந்திய ஒன்றிய அரசுக்கும் பிரதமர் மோடி முன்னிலையில் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த ஒப்பந்தத்தில் இந்திய ஒன்றியத்தின் சார்பில் கையெழுத்தட்டவர் ஆர்.என். இரவி. அந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அரசு ஒரு அறிவிப்பை வெளியிட்டது. அதில் இடம் பெற்றுள்ள வாசகம் மிக முக்கியமானது. ‘Recognize the unique history of Nagaland and its culture and positions of Naga's and sentiments.’ இதனுடைய அர்த்தம், ‘இந்திய அரசு நாகாலாந்து மக்களின் தனித்துவமான கலாச்சாரம், நாகாலாந்து போராளிக் குழுக்களின் நிலைப்பாடு, அவர்களுடைய உணர்வுகள், அவர்களுடைய விருப்பங்கள் இவைகளை அங்கீகரிக்கிறது’ என்று ஒன்றிய அரசினுடைய அறிவிப்பு வெளியானது. ஆனால் என்ன உடன்பாடு ஏற்ப்பட்டது என்பதை மட்டும் அவர்கள் இதுவரை இரகசியமாக அப்படியே வைத்திருக்கிறார்கள். இன்னும் வெளியிடவில்லை.

‘Shared Sovereignty’ (இந்திய இறையாண்மையை பகிர்ந்து கொள்கிறோம்) என்ற வார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதாக பிறகு போராளிக் குழுத் தலைவர் ‘கரன் தாப்பர்’ என்ற பிரபல பத்திரிக்கையாளருக்கு அளித்தப் பேட்டியில் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். தங்களுக்கென்று தனி அரசியல் சட்டமும், கொடியும் வேண்டும் என்ற கோரிக்கை, பேச்சு வார்த்தையின் போது ஏற்கப்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

ஒரு கட்டத்தில் நாகலாந்து ஆயுதம் தாங்கிய குழுக்களும் பிரச்சினையில் தொடர்புடைய அசாம் முதல்வர் பிஸ்வாஸ் சர்மா, நாகா முதல்வர் நெய்டியூரியோ ஆகியோரும் “பேச்சுவார்த்தையை ஒருங்கிணைக்கும் ஆர்.என்.ரவி, நம்பத்தகுந்த மனிதர் அல்ல; அவர் சதி செய்கிறார்; பேச்சு வார்த்தையிலிருந்து விலக வேண்டும்” என்று பிரதமரிடம் வலியுறுத்தினர். ஆர்.என். ரவியை, பிரதமர் மோடி பதவி விலகச் சொன்னார். பிறகு தமிழ்நாடு ஆளுநர் பதவிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். நாகாலாந்திலிருந்து இராணுவ சிறப்பு அதிகாரச் சட்டத்தை (AFSPA) திரும்பப் பெற வேண்டும் என்று நாகாலாந்து சட்டசபை ஒருமித்து நிறைவேற்றிய தீர்மானத்தைத் தொடர்ந்து, அது குறித்து ஆராய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஒரு குழுவை நியமித்திருக்கிறார். தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப மறுக்கும் ஆளுநர் ஆர்.என். ரவியின் அரசியல் பின்னணி இது.

மற்றொரு தகவலையும் குறிப்பிட வேண்டும்.

அய்க்கிய முற்போக்கு கூட்டணி 2007 ஆம் ஆண்டு நீதிபதி பூஞ்சே தலைமையில் ஒன்றிய மாநில அரசு உறவு பற்றி ஆராய ஒரு குழுவை நியமித்தது. அக்குழு 2010 இல் தனது பரிந்துரையை ஒன்றிய அரசிடம் அளித்தது. அதில் 2 கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை. 1) ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட மசோதாவை, மீண்டும் சட்டசபை நிறைவேற்றி அனுப்பினால், (திருத்தங்களுடனோ அல்லது திருத்தம் இல்லாமலோ) ஆளுநர் மசோதாவை 6 மாதத்திற்குள் கட்டாயம் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியாக வேண்டும்.

2) அதேபோல், குடியரசுத் தலைவரால் திருப்பி அனுப்பப்பட்ட மசோதா சட்டசபையில் மீண்டும் நிறைவேற்றினால், குடியரசுத் தலைவர் கட்டாயம் அந்த மசோதாவிற்கு ஒப்புதல் வழங்க வேண்டும். இது நீதிபதி பூஞ்சே குழு வழங்கிய பரிந்துரை.

இவற்றை ஒன்றிய ஆட்சியும், ஆளுநரும், குடியரசுத் தலைவரும் கவனத்தில் கொள்வார்களா?

## கழகம் நடத்திய சட்டப் போராட்டம் வெற்றி: பெரியார் நூல்களை அரசே வெளியிடுகிறது

பெரியாருடைய சிந்தனைகளை 21 மாநில, உலக மொழிகளில் வெளியிடுவதற்கு தமிழ்நாடு அரசு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. தமிழ்நாடு நிதி அமைச்சர் வெளியிட்டுள்ள நிதி நிலை அறிக்கையில் இந்த மகிழ்ச்சியான அறிவிப்பு வெளிவந்துள்ளது. திராவிடர் விடுதலைக் கழகம் மகிழ்ச்சியுடன் இதை வரவேற்கிறது.

பெரியாருடைய நூல்கள் உலகம் முழுவதும் பரவ வேண்டும், இந்தியா முழுவதும் பரவ வேண்டும். மக்களுக்கு அவை எளிதில் கிடைக்க வேண்டும் என்பதற்காக பெரியார் திராவிடர் கழகம் நீண்ட போராட்டத்தை நடத்தியது.

28 தொகுப்பாக பெரியார் எழுத்து சிந்தனைகளை பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டபோது அதை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்குகள் வந்தன. பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம் அந்த வழக்கைத் தொடர்ந்தது. அந்த வழக்கை பெரியார் திராவிடர் கழகம் எதிர்கொண்டது. அப்படி பெரியாருடைய நூல்களை வெளியிடுவதற்கு எந்த தடையும் இல்லை என்று உயர்நீதிமன்றம், உயர்நீதிமன்றத்தின் மேல் அமர்வு தெரிவித்துவட்டன.

அந்த வழக்கு இப்போதும் உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பது ஒரு பக்கம் இருந்தாலும் வெளிடக்கூடாது என்று வைக்கப்பட்ட கோரிக்கைக்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடையை நீக்கிய காரணத்தினால் பெரியாருடைய சிந்தனைகள் இன்று பல்வேறு பதிப்பகங்களால் பல இலட்சக்கணக்கில் வெளியிடப்பட்டு பல மக்களிடையே சென்று சேர்ந்திருக்கிறது.

அந்த அடிப்படையில் தமிழ்நாடு அரசும் அந்த முயற்சிகளை மேற்கொண்டு வட இந்தியாவிற்கும் பெரியார் தேவைப்படுகிற காலத்தில் இந்தி உட்பட 21 மொழிகளில் மொழிபெயர்க்க முன் வந்திருப்பது உண்மையிலேயே பெரியாரியலுக்கு செய்கின்ற மகத்தான தொண்டு. திராவிடர் விடுதலைக் கழகம் இந்த அறிவிப்பை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

அதேபோல, கடந்த 10 ஆண்டுகளாக கேட்பாரற்று முடங்கிக் கிடந்த பெரியார் சமத்துவபுரங்களை புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புத்தக சந்தைகள், இலக்கிய விழாக்கள் நடத்துவதற்கு அரசு முன்வந்திருக்கிறது. கடந்த ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு நிதி நிலை பற்றாக்குறை குறைந்துள்ளது என்ற அறிவிப்பும் நிதி அமைச்சரால் வெளியிடப்பட்டிருக்கிறது. மகிழ்ச்சி வரவேற்போம்.

## ‘தாலிக்கு தங்கம்’ வழங்கும் திட்டத்தை அரசு மாற்றியது பாராட்டுக்குரியது

தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்திற்கு பதிலாக பெண்களின் உயர் கல்விக்கு மாதம் தோறும் 1000 ரூபாய் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு பட்ஜெட்டில் அறிவித்துள்ளது. இது உண்மையிலேயே முற்போக்கான வரவேற்க வேண்டிய ஒரு திட்டம். ஆனால் இத்திட்டத்திற்கு பலரும் எதிர்ப்பு தெரிவித்து வருவதுதான் வேடிக்கையாக இருக்கிறது. “மூவலூர் இராமாமிர்தம்” பெயரால் இதுவரை செயல்பட்டு வந்த திட்டம். 2011ஆம் ஆண்டுவரை, பட்டம், பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு திருமணத்தின் போது 50,000, மற்ற பெண்களுக்கு 25,000 நிதி உதவி வழங்கப்பட்டு வந்தது. இது பெண்களின் கல்வி முன்னேற்றம் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்ட திட்டம்.

2011 இல் ஜெயலலிதா முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு கல்விக்கான இந்தத் திட்டத்தை, திருமணத்துக்கான திட்டமாக மாற்றி இந்த நிதி உதவியோடு 4 கிராம் தங்கத்தை தாலிக்காக வழங்குவது என்ற ஒரு திட்டத்தை பெண்களை கவருவதற்காக கொண்டு வந்தார். பிறகு அதை 8 கிராமாகவும் உயர்த்தி அறிவித்தார்.

பெண்களின் உயர்கல்வி முக்கியமா? அல்லது 12 ஆம் வகுப்பு படித்த பெண்களை திருமண வாழ்க்கைக்கு கொண்டு போவதை அரசு ஊக்குவிப்பது முக்கியமா? இரண்டு கேள்விகளுக்கு விடை தேடுகிற போது, பெண் உரிமையில், பெண் முன்னேற்றத்தில் கவலை கொள்பவர் எவரும் திருமணச் சந்தையில் தள்ளிவிடுவதைவிட, அவர்கள் உயர்கல்வி பெற்று முன்னேறுவதையே விரும்புவர்.

இது குறித்து நடத்தப்பட்ட ஆய்வில் ஏராளமான முறைகேடுகள் நடந்தேறியுள்ளது தெரிய வந்துள்ளது. அதுமட்டுமின்றி, திருமணத்துக்கு தாலி வழங்கும் திட்டத்தின் வழியாக குழந்தைத் திருமணங்கள் குறையும், வரதட்சணை வாங்குவது குறையும் என்றெல்லாம் மதிப்பீடு செய்யப்பட்டது முழுமையாக தோல்வியடைந்துவிட்டது.

திருமணம் என்ற ஒரு நிகழ்ச்சிக்காக தாலிக்கு தங்கம் வழங்குவதை விட பெண்களின் கல்வி வளர்ச்சிக்கான திட்டமாக மாதம்தோறும் அவர்களுக்கு 1000 ரூபாய் வழங்கி அவர்களை உயர்கல்வி வரை படிக்க வைக்க வேண்டும் என்பதுதான் சமூக மாற்றத்திற்கு சரியான முற்போக்குப் பார்வை. இதில் முற்போக்கு பேசுகிற, இடதுசாரி அமைப்புகள் கூட தாலிக்கு தங்கம் வழங்க வேண்டும்; அத்திட்டத்தை நிறுத்தக்கூடாது என்று பேசுவது தான் நமக்கு வியப்பாக இருக்கிறது. தாலிக்கு தங்கம் வழங்குவது கூட ஒரு மதம் சார்ந்த நடவடிக்கை தான். தாலியை பெண்ணடிமையின் சின்னம் என்றே பல படித்த முற்போக்குச் சிந்தனை கொண்ட இளம்பெண்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்.

நிச்சயமாக தமிழ்நாடு அரசினுடைய இந்த திட்டம் மிகச் சரியான திட்டம். பெண் உரிமையில், பெண் விடுதலையில், பெண் கல்வியில் நம்பிக்கையுள்ள அனைவரும், தாலி கட்டிக் கொண்டு 12 ஆம் வகுப்பிலேயே திருமண வாழ்வில் நுழைவதை விட அந்தப் பெண்கள் மேலும் மேலும் உயர்கல்வி பெற்று அந்த ஊக்கத் தொகையை பெறுவதே முக்கியம்.

# பங்கு சந்தையில் 'பூதேவர்' பரம்பரை அடித்த கொள்ளை

*'பூதேவர்கள்' வம்சத்தில் வந்த 'ஆச்சார சீலர்கள்' பங்கு சந்தையில் கொள்ளை அடித்து பங்கு போட்டுக் கொண்ட 'இதிகாசப் பெருமை' களை ஊடகங்கள் வெளிச்சத்துக்கு கொண்டு வரவில்லை, எந்தத் தொலைக்காட்சியும் விவாதக் கச்சேரிகளையும் நடத்தவில்லை. 'இந்திரா, ஆனந்து, நிர்மலா' என்று பல 'வெங்காய பூண்டு' வெறுப்பாளர்களின் அரவணைப்பில் அரங்கேறிய 'ஊழல் மகா காவியத்தை' 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வெளியிடுகிறது.*

### தேசியப் பங்குச் சந்தை உருவாக்கம்

மும்பைப் பங்குச் சந்தை, பங்கு வர்த்தகம் மற்றும் வங்கிச் செயல்பாட்டு முறைகளில் ஏராளமான ஊழல்கள் வெளிச்சத்துக்கு வந்ததைத் தொடர்ந்து, மேம்பட்ட பங்குச்சந்தை வணிக முறைகளை உருவாக்க ஃபெர்வானியின் தலைமையில், ஒரு குழுவை அன்றைய ஒன்றிய அரசின் நிதியமைச்சர் மன்மோகன் சிங் நியமித்தார்.

அந்தக் குழுவின் பரிந்துரைகளின்பேரில், தேசியப் பங்குச் சந்தை என்னும் தனியார் நிறுவனம் உருவாக்கப்பட்டது. இந்த நிர்வாகம், பங்குச் சந்தை வணிகத்தை இணைய வழியே நடத்த முடிவுசெய்தது.

இந்தப் பங்குச் சந்தை, இந்தியப் பங்குப் பரிவர்த்தனை வாரியத்தின் (Securities and Exchange Board of India – SEBI – செபி) கண்காணிப்பின் கீழ் இயங்கிவரும் ஒன்றாகும்.

இந்தியாவில் உள்ள அனைத்துப் பெருநகரங்களிலும் தொடக்கத்தில் இணையம் வழியே பங்குகளை வாங்கி விற்கும் வசதி கொண்டு வரப்பட்டது. இது மிக வேகமாக வளர்ந்து, இன்று இணைய வசதி உள்ள உலகின் எந்த மூலையில் இருந்தும், இந்திய தேசியப் பங்குச் சந்தையில் வணிகம் செய்யும் வசதிகள் கொண்டதாக பேருரு கொண்டுள்ளது.

தேசியப் பங்குச் சந்தையின் மூளையும்-முதுகெலும்பும் தகவல்தொழில்நுட்பம் ஆகும். தன் வணிக வேலை நேரங்களில் 30 ஆண்டுகளில் எப்போதுமே தவறாமல் செயல்பட்டுவரும் தொழில்நுட்பத்தை உருவாக்கி வெற்றிகரமாக நடத்திவருகிறது. இதன் 'அப்-டைம்' 99.99% என்பதே இதன் அடையாளம். அதேபோல், 1992ஆம் ஆண்டு தொடங்கி அதிகரித்துவரும் விற்பனைச் செயல்பாடுகளுக்கு ஏற்ப, தன் செயல் திறனை மேம்படுத்தி வந்துள்ளது தேசியப் பங்குச் சந்தை.

தன் செயல்பாடுகளை 1994ஆம் ஆண்டு தொடங்கிய போது, விநாடிக்கு 2 பங்குப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் செயல் திறன் கொண்டதாக தேசியப் பங்குச் சந்தை இருந்தது. 2001இல் விநாடிக்கு இது 60 ஆக உயர்ந்தது. தற்போது, விநாடிக்கு 1,60,000 பரிவர்த்தனைகளைச் செய்யக் கூடிய செயல் திறன் கொண்ட உலகின் மாபெரும் பங்குச் சந்தைகளுள் ஒன்றாக உருவெடுத்துள்ளது. இதன் தினசரி வணிகம் 2-3 லட்சம் கோடிகள்.

இதன் முதல் மேலாண் இயக்குநர் ரவி நாராயண், 1994 முதல் 2013 வரை பணிபுரிந்தார். 2013-ம் ஆண்டு, அவர் பதவி விலகி, துணைத் தலைவராக, நிர்வாகப் பொறுப்புகளற்ற நிலைக்கு உயர்த்தப்பட்டு, அவர் கீழ் பணிபுரிந்த சித்ரா ராமகிருஷ்ணா மேலாண் இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

### சித்ராவின் பின்புலம்

சித்ரா ராமகிருஷ்ணா 1984ஆம் ஆண்டு பட்டயக் கணக்காளர் பட்டம் பெற்றவர். தொடக்கத்தில் இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கியில் (Industrial Development Bank of India - IDBI) பணிபுரிந்தார். தேசியப் பங்குச் சந்தையை உருவாக்க முடிவெடுத்த இந்திய அரசு, ஐடிபிஐ சேர்மன் நட்கர்னியிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்தது. அவர் தன் கீழ் பணிபுரிந்த அலுவலர் களான ரவி நாராயணையும், சித்ரா ராமகிருஷ்ணா வையும் தேர்ந்தெடுத்து, தேசியப் பங்குச் சந்தை நிறுவன உருவாக்கத்தில் ஈடுபடுத்தினார்.

ரவி நாராயணன் 2013ஆம் ஆண்டு தேசியப் பங்குச் சந்தையின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டதானது, விதிமுறைகளுக்குப் புறம்பான ஒன்று. இந்தப் பதவி புதிதாக உருவாக்கப்பட்டது. இது செபியின் அனுமதியில்லாமல் உருவாக்கப்பட்டது. இது முதல் விதிமீறல்.

அதேபோல, ரவி நாரயண் இடத்தில், புதிய மேலாண் இயக்குநராக சித்ரா ராமகிருஷ்ணா நியமிக்கப்பட்டதிலும், விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை. இது இரண்டாவது விதிமீறல்.



இந்த இரண்டு விதிமீறல்களை பங்குச் சந்தைக் காவலரான செபியும், கண்காணிக்க வேண்டிய ஒன்றிய அரசின் நிதித்துறை அமைச்சகமும் ஏன் அனுமதித்தன என்பது பங்குச் சந்தை நிபுணர்கள், நிதிப் பத்திரிக்கையாளர்களின் சந்தேகம்.

### தேசியப் பங்குச் சந்தையின் பங்களிப்பு

தேசியப் பங்குச் சந்தை உருவாகும் முன்பு, மும்பை பங்குச் சந்தைதான், இந்தியப் பங்குச் சந்தைகளின் தலைமையிடத்தில் இருந்தது. மும்பையில் உள்ள பெரும் தொழில் நிறுவனங்கள், வணிகர்கள், பங்குச் சந்தைத் தரகர்கள், நிழல் உலகத் தாதாக்கள் எனப் பலரும் உலவும் இடமாக இருந்தது.

பங்குச் சந்தைப் பரிவர்த்தனைகள் வெளிப்படையாக இல்லாமல் இருந்தன. சில பெரும் பண முதலைகளின் பிடியில் மொத்த சந்தையும் இருந்தது. இதைத் தாண்டி, தில்லி, கல்கத்தா, சென்னை, கோவை, பெங்களூர், கொச்சி, எனப் பல ஊர்களில் பங்குச் சந்தைகள் இருந்தன. இவை பெரும்பாலும், உள்ளூர் செல்வந்தர்கள் மட்டுமே நுழையக் கூடிய 'தனி மனித கிளப்' களாக இருந்தன.

ஆனால், இணைய வழிச் செயல்பாடுகளைத் தொடங்கிய தேசியப் பங்குச் சந்தை, பங்குப் பரிவர்த்தனைகளை வெளிப்படையாக்கியது. எவர் வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும், வெளிப்படையாக பங்குகளை வாங்கி விற்க முடிந்தது. இடைத்தரகர்கள் சொல்வதுதான் இறுதி உண்மை என்னும் விதி தரைமட்டமாக்கப்பட்டது. சந்தைப் பரிவர்த்தனைகள் முதலீட்டாளரின் கண் முன்னே நிகழ்ந்தது. இதனால், இந்தியாவெங்கும் சிறு முதலீட்டாளர்கள் மிக உற்சாகமாகப் பங்கெடுக்க முன்வந்தார்கள்.

இணையப் பங்குப் பரிவர்த்தனைகளைச் செய்ய முடியாது என வீம்பு பிடித்த மும்பைப் பங்குச் சந்தையும் வேறு வழியின்றி இணைய வழிச் செயல்பாடுகளைத் தொடங்கியது. தொடங்க மறுத்த, முடியாத பல நகரப் பங்குச் சந்தைகள் மாண்டு போயின.

தேசியப் பங்குச் சந்தையானது, இணைய வழிப் பங்குப் பரிவர்த்தனைகள் மூலம், இந்த வணிகத்தைப் பெருமளவு விரிவாக்கி, இந்தியா முழுவதும் உள்ள சிறு முதலீட்டாளர்களும் வெளிப்படையான வணிக முறையில் பங்கெடுக்கும் ஒரு புதிய தொழில் முறையை உருவாக்கியது. ஒன்றிய அரசு நிதித் துறையின் மிகச் சிறந்த கொள்கை முன்னெடுப்பு இந்த நிறுவனம் என்று சொல்லலாம்.

ஆனால், இந்த உருவாக்கத்தில் ஒரு சறுக்கல் என்னவெனில் இது ஒரு தனியார் துறை நிறுவனமாக உருவாக்கப்பட்டதே ஆகும். பங்குச் சந்தை வணிகத்தை நடத்தும் இந்த நிறுவனத்தின் பங்குகள், பங்குச் சந்தையில் இல்லை. இதன் முதலீட்டாளர்களான தேசிய ஆயுள் காப்பீட்டுக் கழகம், பாரத ஸ்டேட் வங்கி போன்றவர்கள் பல முறை வற்புறுத்தியும் இந்த நிறுவனத்தின் பங்குகளைப் பங்குச் சந்தையில் லிஸ்ட் செய்வதை தள்ளிப்போட்டு வந்தார் இந்நிறுவனத்தின் மேலாண் இயக்குநராக இருந்த சித்ரா ராமகிருஷ்ணா.

### ஆனந்த் சுப்ரமணியத்தின் வருகை

2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மேலாண் இயக்குநராகிய சித்ரா ராமகிருஷ்ணா, சில மாதங்களிலேயே, ஆனந்த் சுப்ரமணியத்தை ஆலோசகராக நியமித்தார்.

இந்த ஆனந்த் சுப்ரமணியம், அரசுப் பொதுத் துறை நிறுவனமான 'பால்மர் லாரி'யின் துணை நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்தவர். வருடம் ரூ. 15 லட்சத்துக்கும் குறைவான ஊதியத்தில் பணிபுரிந்து வந்த இவரை, ரூ. 1.4 கோடி சம்பளம் கொடுத்து ஆலோசகராக நியமித்தார் சித்ரா. அடுத்த இரண்டு ஆண்டுகளில், இவர் ஊதியம், 6 முறை உயர்ந்து கிட்டத்தட்ட ரூ. 4 கோடியாகி இருக்கிறது.

வழக்கமாக, தேசியப் பங்குச் சந்தை நிறுவனத்தில் பணிக்கு அமர்த்தப்படுபவர்களுக்கான தகுதிகள், அனுபவம் போன்ற விதிமுறைகள் உண்டு. அது தவிர, நிறுவனத்தில் பலரும் குறுகிய கால ஆலோசகர்களாக நியமிக்கப்படுவதும் வழக்கமாக இருந்துள்ளது. ஆனந்த் சுப்ரமணியம் ஆலோசகராக, நேரடியான பணி நியமனம் என்னும் வழியில் இல்லாமல், பின்வாசல் வழியே உள்ளே அழைத்து வரப்பட்டார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில், இவர் தேசியப் பங்குச் சந்தையின் குழுமச் செயல் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்தப் பதவி என்பது, தேசியப் பங்குச் சந்தையின் மிக முக்கியமான நிர்வாகப் பதவி. இந்தப் பதவிக்கு ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் எனில், அது, பங்குச் சந்தையின் காவலரான செபியிடம் முன் அனுமதி பெற்ற பின்னரே செய்யப்பட வேண்டும். ஆனால், இவரது பதவி உயர்வுபற்றிய முன் அனுமதியை தேசியப் பங்குச் சந்தை செபியிடமிருந்து பெறவில்லை. இது அப்பட்டமான விதிமீறல்.

பதவி உயர்வின் பின்னர், தேசியப் பங்குச் சந்தையின் இரண்டாவது உயர் நிர்வாக நிலையை அடைந்தார் ஆனந்த். தேசியப் பங்குச் சந்தை நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்துத் துறைத் தலைவர்களும் ஆனந்த் வழியேதான் சித்ராவைச் சந்திக்க முடியும் என்னும் நிலை உருவானது.

பங்குச் சந்தையைப் பற்றிய துறைசார் அனுபவம் கொஞ்சமும் இல்லாத ஒருவருக்கு, பணியும், ஊதிய உயர்வுகளும், பதவி உயர்வும் எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டன என்பது மில்லியன் டாலர் கேள்வி

### ஒரே இட வணிக முறை

பங்குச் சந்தையில் எந்தப் புதிய வணிக முறை அறிமுகப்படுத்தப்பட்டாலும், அது இந்தியப் பங்குச் சந்தை வாரியமான செபியினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆனால், 2010ஆம் ஆண்டு, செபியின் முறையான அனுமதியும், அங்கீகாரமும் இல்லாமல், தேசியப் பங்குச் சந்தை நிறுவனமானது இந்தப் புதிய வணிக முறையைத் தொடங்கியது.

தேசியப் பங்குச் சந்தை நிறுவனத்தின் சர்வர்கள் இருக்கும் அதே இடத்தில், அங்கே வர்த்தகம் புரியும் பங்குச் சந்தை வர்த்தகர்களின் சர்வர்களையும் வைத்து வணிகம் செய்யும் முறைதான் 'கோ லொக்கேஷன் வணிக முறை' (Colocation Trading facility) என அழைக்கப்படுகிறது. இந்த முறையில், மற்ற சில்லறை வணிகர்களைவிடச் சில நுண் விநாடிகளுக்கு முன்பே, வர்த்தகத் தகவல்கள் இந்தப் பெரும் வணிகர்களுக்குக் கிடைக்கும். இந்தச் சாதகம், பெரும்பாலும் கணிணி மென்பொருள் மூலம் இயக்கப்படும் பங்குப் பரிவர்த்தனைகளில், பெரும் லாபம் ஈட்டித் தரும் ஒன்றாகும்.

இந்த முறை தேசியப் பங்கு நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கு எதிரானது. அதில் வணிகம் செய்யும் அனைவருக்கும் சமநிலை மறுக்கப்படுவதாகும் என நிதித் துறை நிபுணர்கள் பலரும் சொல்கிறார்கள்.

இதில் நிகழ்ந்துவந்த முறைகேடுகளைப் பற்றிய ஓர் அனாமதேயப் புகார் 2015-ம் ஆண்டு, இந்தியப் பங்குச் சந்தை வாரியத்துக்கு வந்தது. இந்தப் புகாரின் ஒரு நகல், 'மணி லைஃப்' என்னும் நிறுவனத்தை நடத்திவந்த பத்திரிக்கையாளர் சுசேதா தலாலுக்கும் அனுப்பப்பட்டிருந்தது.

மேலும் 2015 ஜனவரியில் வந்த அந்தப் புகாரை விசாரித்த இந்தியப் பங்குச் சந்தை வாரியம் செபி, இது தொடர்பான விளக்கங்களை அளிக்குமாறு தேசியப் பங்குச் சந்தை நிறுவனத்தைக் கேட்டது. அதற்கு தேசியப் பங்குச் சந்தை நிறுவனம் ஒரு விட்டேத்தியான பதிலைக் கொடுக்க, அதையும் செபி வாங்கி வைத்துக்கொண்டது.

தனக்கு வந்த அனாமதேய கடிதத்தை முன்வைத்து சுசேதா தலால், பங்குச் சந்தை மற்றும் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களிடம் ஆலோசித்தார். அவர்கள் இது போன்ற முறைகேடுகள் நடக்கும் சாத்தியங்கள் உண்டு என்பதை உறுதிசெய்தார்கள். எனவே, இந்தப் புகாரை தேசியப் பங்குச் சந்தைக்கு அனுப்பி, இதுபற்றிய விளக்கங்களைக் கோரினார் சுசேதா தலால். ஆனால், பல மாதங்களாகியும் பதில் வராததால், தனக்கு வந்த அனாமதேய கடிதத்தை, 'மணி லைஃப்' இதழில் பிரசுரித்து, இதுபற்றிய மேலதிகத் தகவல்களைத் திரட்டலானார்.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# சுயமரியாதைத் திருமணங்களைப் பதிவு செய்ய மறுக்கும் பத்திரப்பதிவுத் துறைகள்

அதிமுக ஆட்சியின் கடைசி ஒன்றரை ஆண்டுகளில் சென்னை, சேலம், கோவை, ஈரோடு, திருப்பூர் ஆகிய ஐந்து மாவட்டங்களைத் தவிர வேறெங்கும் சுயமரியாதைத் திருமணச் சட்டத்தின்கீழ் சார்பதிவாளர் அலுவலகங்களில் பதிவுகளே நடைபெறவில்லை. சுயமரியாதை, சாதி மறுப்புத் திருமணங்களை நடத்தியவர் தோழர் ரமேஷ் பெரியார். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்ற விவரங்கள் மூலம் இது தெரிய வந்துள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 575 சார் பதிவாளர் அலுவலகங்களில் கடந்த 2 ஆண்டுகளில் 9 அலுவலகங்களில் மட்டுமே சுயமரியாதைத் திருமணச் சட்டத்தின் கீழ் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. அதிமுக முன்னாள் அமைச்சர்களின் மறைமுக மிரட்டலே இதற்குக் காரணம் என்பது பரவலான குற்றச்சாட்டு. ஆனால் ஆட்சி மாறியும் சார் பதிவாளர்களின் மனநிலை இன்னும் மாறாமல் அப்படியே நீடிக்கிறது.

இப்போதும் ஜாதி கடந்து, காதல் திருமணம் செய்வோர் சுயமரியாதைத் திருமணச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய மிகுந்த போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. சுயமரியாதைத் திருமணச் சட்டத்தை நாடு முழுவதும் சட்டப்பூர்வமாக்க திமுக எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்க வேண்டுமென சமீபத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியுள்ளார்.

சுயமரியாதை பதிவுத் திருமணங்களை அடுத்தக் கட்டத்திற்கு நகர்த்தும் அரசின் மனநிலைக்கு மாறாக சார்பதிவாளர்கள், அதிமுக ஆட்சிக்கால மனநிலையிலேயே இருந்துகொண்டு ஜாதி மறுப்பாளர்களின் சுயமரியாதை திருமணங்களுக்கு முட்டுக்கட்டை போடுவது எவ்விதத்திலும் நியாயமல்ல. கடந்தகால நெருக்கடிகளை நீக்கி, மிக எளிமையாக சுயமரியாதை திருமணங்களை பதிவுசெய்யும் சூழல் மீண்டும் ஏற்பட வேண்டும்.

அதற்கான தெளிவான ஆணையை அரசு பிறப்பிக்க வேண்டும்; அண்ணா கொண்டு வந்த மகத்தான சமூகப் புரட்சித் திட்டத்தைக் காப்பாற்றியாக வேண்டும்.

# கழக செயலவை ஈரோட்டில் ஏப்.3இல் கூடுகிறது

எதிர்கால செயல் திட்டங்களை உருவாக்கிடவும் கடந்தகால செயல்பாடுகளை ஆய்வுக்கு உட்படுத்தவும் கழக அமைப்புகளின் செயல்பாடுகளை பரிசீலிக்கவும் திராவிடர் விடுதலைக் கழகச் செயலவை 3.4.2022 ஞாயிறு காலை 10 மணியளவில் ஈரோட்டில் கூடுகிறது. செயலவை உறுப்பினர்கள் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இடம் : கே.கே.எஸ்.கே. திருமண மகால், பவானி ரோடு.

தோழமையுடன்
கொளத்தூர் மணி
தலைவர்
திராவிடர் விடுதலைக் கழகம்

குறிப்பு: செயலவை உறுப்பினர்கள் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' சந்தா புத்தகங்களை பெயர், முகவரி மற்றும் உரிய தொகையோடு செயலவையில் மீதமுள்ள சந்தா புத்தகங்களை ஒப்படைக்க தயாராக வருமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

# குட்டு உடைகிறது : பாஜகவுக்கு ஆதரவாக செயல்பட்ட ரிலையன்ஸ், பேஸ்புக்

2019 நாடாளுமன்ற பொதுத் தேர்தல் சமயத்தில் பேஸ்புக் நிறுவனம் பாரதிய ஜனதாவுக்கு ஆதரவாக செயல்பட்டது ஆய்வறிக்கை மூலம் அம்பலமாகியுள்ளது. ரிலையன்ஸின் நிதியில் இயங்கும் டிஜிட்டல் ஊடகம் ஒன்று பேஸ்புக்கில் போலிச் செய்திகளை பகிர்ந்து பரப்புரை மேற்கொண்டதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைதளங்களில் பதிவிடப்பட்ட அரசியல் சார்ந்த விளம்பரங்கள் குறித்து Ad Watch அமைப்புடன் இணைந்து The Reporters Collective ஆய்வு ஒன்றை மேற்கொண்டு அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்திய தேர்தல்களில் அரசியல் விளம்பர பரப்புரைகள் மற்றும் பேஸ்புக் அரசியல் விளம்பரக் கொள்கைகளின் தாக்கத்தை மதிப்பிடுவதே இந்த ஆய்வின் நோக்கம். 2019ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் 2020 நவம்பர் வரையிலான காலகட்டத்தில் பேஸ்புக் மற்றும் இன்ஸ்டகிராமில் பதிவிடப்பட்ட 5 லட்சத்து 36 ஆயிரத்து 70 அரசியல் சார்ந்த விளம்பரங்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அந்த சமயத்தில் நடைபெற்ற 9 மாநில சட்டமன்ற தேர்தல்கள் மற்றும் நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் பாரதிய ஜனதாவுக்கு பயன்தரும் வகையில் பேஸ்புக் செயல்பட்டது ஆய்வில் அம்பலமாகியுள்ளது.

காங்கிரஸுக்கு ஆதரவாக செயல்பட்டதாக கூறி 687 பக்கங்களை நீக்கிய பேஸ்புக் நிறுவனம், பாரதிய ஜனதாவுக்கு ஆதரவாக செயல்பட்டதாக ஒரேயொரு பக்கத்தையும் 14 கணக்குகளையும் மட்டுமே நீக்கியது. அதுவும் சில்வர் டச் என்ற பெயரில் இயங்கிய தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் கணக்குகள். பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராமில் New J என்ற பக்கத்தில் நாடாளுமன்ற தேர்தல் வரையிலான 3 மாதங்களில் சுமார் 170 விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 10 தேர்தல்களை உள்ளடக்கிய 22 மாதங்களில் 718 அரசியல் விளம்பரங்கள் இந்த பக்கத்தால் பகிரப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் பாரதிய ஜனதா வேட்பாளர்களை புகழ்ந்தும், பிரதமர் மோடிக்கு ஆதரவாகவுமே உள்ளன. மத உணர்வுகளைத் தூண்டும் வகையிலும் எதிர்க்கட்சி தலைவர்கள் மற்றும் அவர்களின் பரப்புரைகளைக் கிண்டல் செய்யும் காணொலிகளும் பகிரப்பட்டிருந்தன. பாகிஸ்தானுக்கு எதிராகவும், இஸ்லாமியர்களுக்கு எதிராகவும் பல பதிவுகள் இடம்பெற்றுள்ளன. சிறிதும் உண்மைத் தன்மை இல்லாமல் போலிச் செய்திகளே அதில் இடம் பெற்றிருந்தன.

2019ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் போபால் தொகுதி வேட்பாளராக மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் தொடர்புடைய பிரக்யா தாக்கூர் அறிவிக்கப்பட்டார். அடுத்த சில நிமிடங்களிலேயே New J பக்கத்தில் போலிச்செய்தி என்று பகிரப்பட்டது. மாலேகான் குண்டுவெடிப்புக்கு தனது வாகனத்தை கடன் வழங்கிய குற்றச்சாட்டில் இருந்து பிரக்யா தாக்கூர் விடுவிக்கப்பட்டதாக வெளியான இந்த செய்தி , ஒரே நாளில் 3 லட்சத்திற்கும் அதிகமான பார்வையாளர்களை பெற்றது. இப்போதும் அந்த வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்படவில்லை.

அதேபோல 2019 ஏப்ரல் 11ஆம் தேதி ராகுல் காந்தியின் பிரசார வீடியோ ஒன்று New J பக்கத்தில் வெளியிடப்பட்டது. பயங்கரவாதத்திற்கு எதிராக பாஜக மென்மையான போக்கை கடைபிடிக்கிறது, 1990ஆம் ஆண்டில் பாஜக ஆட்சியில்தான் மசூத் ஆசார் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்றும் ராகுல் காந்தி பேசிய உரையில் இருந்து, 'ஆசார் ஜி' என ராகுல் காந்தி கிண்டலாக பேசிய பகுதியை மட்டும் வெட்டி, தீவிரவாதியை மரியாதையோடு ராகுல் காந்தி பேசியதாக வீடியோ எடிட் செய்யப்பட்டு பகிரப்பட்டது. இந்த காணொலி நான்கே நாட்களில் 6 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமானோரால் பார்க்கப்பட்டது.

2019 ஏப்ரலில் தேர்தல் பரப்புரையில் அணு ஆயுத இருப்பு குறித்து பேசிய பிரதமர் மோடி, "பாகிஸ்தானின் அணு ஆயுதங்களுக்கு பயப்படும் கொள்கையை இந்தியா நிறுத்திவிட்டது. எங்களிடம் அணு ஆயுத பொத்தான் இருக்கிறது, எங்களிடம் அணு ஆயுத பொத்தான் இருக்கிறது என்று ஒவ்வொரு நாளும் சொல்வார்கள் (பாகிஸ்தான்). அப்படியானால் நம்மிடம் (இந்தியாவிடம்) என்ன இருக்கிறது? தீபாவளிக்கு வெடித்து விட்டோமா?" என பாகிஸ்தானுக்கு எதிராக தேச உணர்வுகளை தூண்டும் வகையில் மோடி பேசியிருந்தார். இதுகுறித்து ட்விட்டரில் கருத்து தெரிவித்து இருந்த காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் மெகபூபா முப்தி, "தீபாவளிக்கு இந்தியா அணுகுண்டு வெடிக்கவில்லை என்றால், ஈத் பண்டிகைக்கு பாகிஸ்தானும் வெடிக்கவில்லை. பிரதமர் மோடி ஏன் இவ்வளவு கீழ்த்தரமாக இறங்கி அரசியல் பேச வேண்டுமென தெரியவில்லை" என்று பதிவிட்டிருந்தார்.

மோடியின் பேச்சை தவிர்த்துவிட்டு மெகபூபா முப்தியின் கருத்தை மட்டும் எடுத்துக்கொண்ட NEW J விளம்பரம், "மெகபூபா முப்தி பாகிஸ்தானுக்காக சிலிர்க்கிறார், மெகபூபாவின் பாகிஸ்தான் மீதான காதல் இரண்டாவது முறையாக அம்பலமானது. மெகபூபா முப்தி மீண்டும் பாகிஸ்தானின் பக்கம் திரும்பினார்" என்று வன்மத்தோடு பதிவிட்டது.

இந்த New J நிறுவனமானது ஜியோ பிளாட்பார்ம்ஸ் லிமிடெட்டின் துணை நிறுவனமாகும். ரிலையன்ஸ் குழுமத்தின் நிதியிலேயெ இந்நிறுவனம் இயங்குவதும் ஆய்வறிக்கை உறுதிப்படுத்துகிறது. ஷலப் உபாத்யாய் என்பவர் இந்த New J நிறுவனத்தின் நிறுவனர். இவர் ரிலையன்ஸ் நிறுவனத்தோடும், பாரதிய ஜனதா கட்சியோடும் மிக நெருக்கமான தொடர்பு கொண்டவர். இவரது தந்தையான உமேஷ் உபத்யாய் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் ஊடக இயக்குநராக உள்ளார். ரிலையன்ஸ் குழுமத்தின் ஊடகப் பிரிவான நெட்வொர்க்-18 குழுமத்திற்கும் இவர்தான் தலைவர். அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் 2 ஆண்டுகளே உள்ள நிலையில் பேஸ்புக் மற்றும் ரிலையன்ஸ் நிறுவனத்தின் சதிச் செயல்கள் வெட்ட வெளிச்சத்திற்கு வந்துள்ளன. இம்முறையேனும் எதிர்க் கட்சிகள் விழிப்போடு இருக்க வேண்டிய அவசியத்தை இந்த ஆய்வறிக்கைகள் நமக்கு உணர்த்துகின்றன.

– ர. பிரகாஷ்

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 25th March 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN